**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE UNIT OF M/S. A. SHANMUGAM ROUGH STONE & GRAVEL QUARRY AT S.F.No. 19/7A, 19/7B, 19/12, 19/13,19/14A, 19/14B OF THOLLAMUR VILLAGE & S.F.No. 119/1A NEMILI VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT ON 27.12.2023 AT 11.00 AM AT M/S.DHANALAKSHMI MAHAL, KARASANUR VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT.**

**Present:**

1. **Thiru. S. Kaja Sakul Hameed** : Revenue Divisional Officer, Viluppuram District
2. **Thiru.Er.M.Selvakumar** : District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Viluppuram.

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Villuppuram.**

District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram has welcomed the District Collector, Government officials, Environmentalists and the Public present in the public hearing conducted on behalf of Tamilnadu Pollution Control Board and also informed that the proposed project of Rough Stone & Gravel Quarry owned by M/s. A. Shanmugam Rough Stone & Gravel Quarry to an extent of 3.66.45 Hectare at S.F.No.19/7A, 19/7B, 19/12, 19/13, 19/14A, 19/14B of Thollamur Village & S.F.No. 119/1A of Nemili Village, VanurTaluk, Villupuram District falls under the B1 Category and Schedule 1A of Environment Impact Assessment (EIA) Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change, therefore it is necessary to conduct public hearing to obtain Environmental Clearance for the quarry projects from the State Environment Impact Assessment Authority (SEIAA).

The public hearing meeting for M/s.A.Shanmugam Rough Stone & Gravel Quarry to an extent of 3.66.45 Hectare at S.F.No.19/7A, 19/7B, 19/12, 19/13, 19/14A, 19/14B of Thollamur Village & S.F.No. 119/1A of Nemili Village, Vanur Taluk, Villupuram District is being conducted based on EIA Notification dated:

14.09.2006 published by Ministry of Environment and Forest Climate Change New Delhi.

Press release for this public hearing meeting was published in Times of India and Daily Thanthi newspapers dated on 21.11.2023 with the approval of the District Collector, Villupuram for conducting of public hearing meeting on 27.12.2023 at 11.00 AM.

In this regard, District Environmental Engineer has requested the public to express their views one by one in a peaceful manner and also in writing.

Further District Environmental Engineer has requested the project consultant to present the project details.

**Technical Presentation, G. Umamaheshwaran, EIA Consultant, GEO Technical Mining Solutions, Dharmapuri.**

Project Consultant, GEO Technical Mining Solutions, Dharmapuri, has presented the details of the project of A. Shanmugam Rough Stone & Gravel Quarry through power point presentation.

**District Environmental Engineer,TNPCB, Villuppuram.**

He has requested the public to inform their name and village before expressing their suggestions, concerns and queries about this project and also assured that their views will be recorded and forwarded to the State Environment Impact Assessment Authority.

**1. Mr.Purushothaman, Nemili Village**

He informed that,

The Project Consultant presentation regarding the project is not audibleto the public. He stated that details about the proposed rough stone quarry in which the public hearing meeting is conducted at present shall be distributed through Xerox copies. The details regarding the explosion about the depth to be exploded, type of bore utilized for explosion and the benefits to the public from the said quarry shall be given by Xerox copies to the public. Though the proposed quarry leased from our

village is appreciable, but the public would like to know what are the basic facilities and benefits will be provided from the proposed said quarry. The display in the screen is not clear. It has been asked the public to express their views regarding whether this quarry shall establish or not and also the officer explanation and proponent presentation were not audible.

What are all the facilities will be provided the by the proposed quarry and no medical camp has been conducted in our Village. Lot of dust were accumulated in our village. Air pollution is being caused in our village during blasting of rough stones.I don't what will happen while operation of the quarry.In the presentation it has been displayed that green belt being developed in the said area but no trees have been developed in our village. They have cut down all the trees. He again requested that if the details of the project will be given to everyone through xerox copies so as to know about the proposed quarry.

**2.Mr.Janakiraman, Eraiyur Village**

He informed that,

It was stated by the project proponent that the area of this quarry land is 3.66.45 hectares. The details of the extent of land for the existing two quarries in our village have not been furnished. You have stated that project proponent has fulfilled all the basic requirements of our villagers. Everyone can see the dust deposited for half feet in our villages and the same will be washed away after rain. Similarly, heavy load vehicles were travelling on the village roads. Explosives as displayed in the project details have not been utilized. Cracks were formed due to blasting of the quarry by using the bore well explosion. We couldn't even eat a normal drumstick leaf. No official has come to see this. We have made our complaint directly and in writing and in person. The same has been informed to the Pollution Control Board official once. All the people in the village are facing problems related to lungs and breathing. Perumbakkam to Thiruvakarai road is heavily contaminated with dust.We don't which explosives were being utilized by the each quarries. Without giving a proper explanation to the above said reasons, he has expressed his objection to establish quarries in Erayur, Nemili, Thiruvakarai and Thollamur villages. People are greatly affected by it. We have filed many complaints about water bodies being affected. Puthuputtan and Iyyanarappan Temples were located nearby quarry which has not been shown in the map. It could be informed by Dom Dom regarding the

public hearing so that the villagers would gather and express their opinion. Another public hearing meeting shall be conducted by gathering all the villagers. Only a few women have come to this meeting, since only women are suffering in this regard. It was informed that job will be provided for the local people but no local people is working in the quarries located in our village. No quarry in operating as per the rules and regulations.

**3.Mr.Gopalakrishnan, Eraiyur Village**

He said that,

He has requested that all the crusher and quarry owners to provide medical facilities to the surrounding villagers once in 6 months since human health is very important. Quarries are being operated only based on the resources. Our villagers are mainly depending upon quarry and crusher for their livelihood. If there is no industry, people will not get employment. He has welcomed the quarry stating that the fund generated from these quarries would provide to improve schools and colleges in our surroundings .Crushers and quarries owners shall provide basic facilities and job opportunities to the local people. He requested that job opportunity should be given only for the local people. He strongly claimed that all quarry and crusher owners to jointly conduct a medical camp facility in the same hall once in 6 months for all the villagers around here. If not, he said that he protest against the quarry.

**4.Mr.Sathish, Social Activists**

He informed that,

I respect your manners, culture and traditions. I agree with your valid points. He has requested the government to adopt the village to solve their problems immediately and to release more funds to develop sustainable development and to provide employment to the public and also requested the higher government officials to give permanent houses to the local people there. He has requested the quarry owner to develop trees and preserve greenery in this village and also requested that the owner operate as per the law.

**5.Mr.Kanagaraj, Thollamur Village**

He informed that,

People in our village are facing many difficulties. Today everyone will occupy the land and depleting the resource. This leads to incoming water shortage to the lake. , hence we are struggling. Except men no women are present in this public hearing meeting. There was no announcement in the village that a consultation meeting would be held for setting up a quarry in Thollamur. It could be informed by Dom Dom regarding the public hearing. At least 10 women should attend this meeting, since this could create awareness among the public..

**6.Mr.Gnansekar, Thollamur Village**

He informed that,

There is no issue for establishing the quarry in our village. Project proponent has informed that they are giving employment to the Thollamur villagers. There are 10 quarries operating in our village. From those quarries, so far no one from our village have been employed even as a labour. No single person from our village is working from those quarries located in our village. Our village is only having school up to elementary level. Other students from our village have to go to the nearby Karasanur School which being severely polluted by dust while travelling along the road more over the students have to walk 3 kilometres from our village. We don't have any job opportunities from those quarries. Even though the project proponent has agreed to give importance to our villagers, but the same has not been implemented.

**7.Mr.Dharmenthiran, Eraiyur Village**

He informed that,

No quarries were following the rules and regulation. The quarry owners were not using the common road provided by the Government for the transportation of gravel and rough stone, but using separate road on the banks of lakes and common places provided by the quarry owners.The quarry owner shall provide personal protective equipment to the operators working in the mining area. About three to four causalities occurring once in a month because of not providing proper protective

equipment and the same have be hide by the quarry owners and the same was not informed to people and police stations. The quarry owners were mining the additional resource by leasing the patta land located adjacent to the project site. So far we have lodged 10 complaints to the District Collector against the quarries located. So far, no reply has been received and the complaint has not been forwarded to A.D.Mines. The quarry/crusher owners should provide air pollution control device to control the dust emission and to avoid accidents but no quarry owners were implementing. As a result, many people in our village affected from kidney, eye-related problems. Also, students get affected by dust while going to school thereby causing medical expense from the parents.

**District Environmental Engineer,TNPCB, Villuppuram.**

Thanked to the Revenue Divisional Officer and thanked all the Public, Medias Police Officers and NGOs who have participated in the public hearing meeting.

The meeting came to concluded.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing (Total pages 8 &101 persons).
3. Copy of Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Villuppuram.

Revenue Divisional Officer,
Villupuram.

**விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளாமூர் கிராமம், ச. எண். 19/7A, 19/7B, 19/12, 19/13, 19/14A, 19/14B மற்றும் நெமிலி கிராமம், ச. எண். 119/1A, திரு. A. சண்முகம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் 27.12.2023 அன்று காலை 11.00 மணியளவில் திரு. தனலட்சுமி மஹால், கரசானூர் கிராமம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரம்:**

**பங்கேற்றோர்:**

திருவாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **திரு. சே. காஜா சாகுல் ஹமீது** | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>விழுப்புரம். |
| 2. | **Er. மு. செல்வகுமார்** | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளாமூர் கிராமம், ச. எண். 19/7A, 19/7B, 19/12, 19/13, 19/14A, 19/14B மற்றும் நெமிலி கிராமம், 119/1A-ல் 3.66.45 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட திரு. A. சண்முகம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி நிறுவனமானது, குவாரியை இயக்குவதற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன்படி 5.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி

பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள். A. சண்முகம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் தி/ள். தனலட்சுமி மஹாலில் 27.12.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறுமென டைமஸ் ஆப் இந்தியா மற்றும் தினத்தந்தி செய்திதாள்களில் 21.11.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் அவர்களை தலைமையேற்று நடத்தி தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்.

<u>தொழில்நுட்ப விளக்க வல்லுநர், G. உமாமகேஸ்வரன், EIA Consultant, GEO Technical Mining Solutions, Dharmapuri.</u>

திட்ட ஆலோசகர், தி/ள். A. சண்முகம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்</u>

பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்களுடைய கருத்துகளை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டார்.

1. <u>திரு. புருஷோத்தமன், நெமிலி கிராமம்</u>

இவர் கூறுகையில்,

திட்டம் தொடர்பான விளக்கவுரையில் ஒலி சரியாக கேட்கவில்லை என்று தெரிவித்தார். குவாரி இயக்க அனுமதி பெறுவதற்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் வைத்துள்ளீர்கள். குவாரியை இயக்கும்போது அதனை எந்த முறையில் செயல்படுத்த உள்ளீர்கள் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்த ஒளிநகல் எடுத்து கொடுத்திருக்கலாம். ஏனெனில், அவர்கள் எப்படி வெடிக்க போகிறார்கள்? எந்த அளவுக்கு ஆழம் போட போகிறார்களா? சாதாரணமாக முன்பு இருந்த இயந்திரம் போல வைத்து போட போகிறார்களா? இல்லை வண்டி வைத்து, போர் இயந்திரம் மூலம் போட போகிறார்களா பற்றிய விவரங்களை ஒளிநகல் எடுத்து அனைவரிடம் கொடுத்தால், எங்கள் கிராமத்திற்கு என்ன செய்ய போகிறீர்கள் என்பதை நாங்கள் தெரிந்துகொள்வோம். அவர்கள் குவாரியை லீசுக்கு எடுத்து இருப்பது மகிழ்ச்சியான செய்தி தான். அதற்காக அடிப்படை வசதிகள் என்னென்ன செய்ய போகிறார்கள் என்பது எங்களுக்கு எதுவும் தெரியவில்லை. திட்ட ஆலோசகர், திட்டம் தொடர்பாக திரையில் காண்பித்தது சரியாக தெரியவில்லை. அவர் பேசினது சரியாக கேட்கவில்லை. திட்டத்தை பற்றி நீங்கள் திரையில் காட்டியது தெரியவில்லை என்று தெரிவித்தார். இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கல் உடைக்கலாமா, உடைக்க கூடாதா, மக்களுக்கு எதிர்ப்பு இருக்கிறதா, இல்லையா என்று கேட்கிறீர்கள். அலுவலகத்தில் இருந்து வந்திருப்பவர்கள் பேசினதும் சரியாக கேட்கவில்லை. குவாரி சார்பாக திட்ட ஆலோசகர் பேசினதும் கேட்கவில்லை. இந்த கல் குவாரி இயக்குவதற்கு, மக்களுக்கான அடிப்படை வசதிகள் என்னென்ன செய்ய போகிறீர்கள்? ஒரு மருத்துவ முகாம் கூட எங்கள் ஊரில் இல்லை. எங்கள் ஊரில் தூசு அதிகமாக உள்ளது. ஒரு முறை வெடி வைக்கும் போது எங்கள் ஊரில்காற்று மாசு அடைந்த

வருகிறது. இதற்கு முன் என்ன செய்தார்கள் என்பது தெரியவில்லை.இப்போது இதற்கு என்ன செய்ய போகிறீர்கள் என்பது தெரியவில்லை. படத்தில் பசுமையாக இருப்பது போல் காட்டியுள்ளீர்கள். அதுபோல எங்கள் ஊரில் மரங்கள் எதுவும் கிடையாது. எல்லா மரங்களையும் வெட்டிவிட்டார்கள். அதை பற்றி பொதுமக்களுக்கு தெளிவாக காண்பித்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்தார். திட்டத்தை பற்றிய விவரங்களை ஒளிநகல் எடுத்து அனைவருக்கும் கொடுத்தால், அதை பற்றி தெரிந்துகொள்வோம் என்று கேட்டுக்கொண்டார்.

2. <u>திரு. ஜானகிராமன், எறையூர் கிராமம்</u>

இவர் கூறுகையில்,

இந்த குவாரி நிலத்தினுடைய பரப்பு 3.66.45 ஹெக்டேர் என்று தெரிவித்தீர்கள். ஏற்கனவே வழங்கப்பட்ட குவாரினுடைய அளவு நீங்கள் காட்டவில்லை என்று தெரிவித்தார். மொத்தத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டது 2 குவாரி, தற்போது 3 என்று காட்டியுள்ளீர்கள். இதற்கெல்லாம் ஒரே உரிமையாளர்தான். இதனுடைய அடிப்படை தேவைகள் எல்லாம் நீங்கள் பூர்த்தி செய்துள்ளதாக தெரிவித்தீர்கள். எங்கள் கிராமத்திற்கு வந்து பார்த்தால், அந்த சாலையில் அரை அடி மண் படிந்து இருக்கும். மழை பெய்தால் தான் அது போகிறது. அதே போல சாலைகளில் அதிக எடையுடன் வண்டிகள் செல்கிறது. வெடிகள், நீங்கள் சொல்வது போன்ற வெடிகள் மூலம் வைப்பதில்லை. வெடியானது அதிகபட்சமாக போர்வெல் வெடி வைப்பதால் எல்லா வீடுகளிலும் விரிசல் ஏற்படுகிறது. சாதாரண ஒரு முருங்கை கீரை கூட எங்களால் சாப்பிட முடியவில்லை. இதை எந்த அதிகாரியும் வந்து பார்ப்பது இல்லை. எங்களுடைய புகாரினை நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் தெரிவித்துள்ளோம். மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரியிடம் ஒரு முறை நேரில் சந்தித்து கூறியுள்ளேன். கிராமத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் நுரையீரல் சம்பந்தமாக, மூச்சு விடுவது சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. பெரும்பாக்கத்திலிருந்து திருவக்கரை

சாலைகளில் செல்ல முடியாத அளவுக்கு மாசு அடைந்துள்ளது. எந்தெந்த குவாரிகளில் முறையான வெடி பொருளை வைத்து இயக்குகிறார்கள் என்பது தெரியவில்லை. இதற்கெல்லாம் சரியான விளக்கம் கொடுக்காமல், எறையூர், நெமிலி, திருவக்கரை, தொள்ளாமூர்களில் சம்பிரதாய செயலாக உள்ளதால், தன்னுடைய கடுமையான ஆட்சியேபனையை தெரிவித்தார். மக்கள் இதில் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். நீர்நிலைகள் பாதிக்கப்படுவதாக நாங்கள் எத்தனையோ புகார்கள் அளித்துள்ளோம். இந்த குவாரிக்க அருகில் புத்துபுட்டான் கோவில், அய்யனாரப்பன் கோவில் உள்ளது. இதை யாரும் அந்த வரைபடத்தில் காட்டவில்லை. கிராமத்தில் உள்ள மக்களுக்கு தண்டோரா போட்டு சொல்லி இருந்தால் மக்கள் கூடி அவர்களது கருத்தை தெரிவித்து இருப்பார்கள். இன்னொரு நாள் இந்த மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தை கூட்டி பொதுமக்களிடம் கருத்து கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த கூட்டத்தில் பெண்கள் சிலர் தான் வந்துள்ளார்கள். ஏனெனில் அவர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். உள்ளூர்வாசிகளுக்கு வேலை வாய்ப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளூர்காரர்கள் யாரும் வேலைக்கு சேர்க்கப்படுவதில்லை. இந்த சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு எந்த குவாரியும் இயங்கவில்லை என்று கடுமையான ஆட்சியேபனையை தெரிவித்துக்கொண்டார்.

3. <u>திரு. கோபால கிருஷ்ணன், கரசானூர் கிராமம்</u>

இவர் கூறுகையில்,

முன்னர் அண்ணன் அவர்கள் சொன்னது எல்லாமே உண்மைதான். அதேபோல, குவாரி நடத்துவதற்கு கிரஷர் மற்றும் குவாரி உரிமையாளர்கள் அனைவரும் சேர்ந்து 6 மாதத்திற்கு ஒரு முறை சுற்றியுள்ள கிராம மக்களுக்கு மருத்துவ வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மனிதனுக்கு உடல் ஆரோக்கியம் மிக முக்கியம். இங்கு உள்ள அனைத்து கிரஷர் மற்றும் குவாரி

உரிமையாளர்கள் இதனை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அடுத்தப்படியாக, இங்கு உள்ள தொழில்வளங்களை வைத்துதான் குவாரி செயல்படுகிறது. மக்கள் குவாரி மற்றும் கிரஷர் வேலைகளை நம்பிதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கு தொழில் வளம் இல்லாமல் இருந்து இருந்தால், மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காமல் இருந்து இருக்கும். இந்த குவாரிகள் மூலாமாக கிடைக்கும் பணத்தினால் அங்குள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளை மேம்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று குவாரியை வரவேற்றார். மேலும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதி வேண்டும், வேலை வாய்ப்புகள் வேண்டும். அது இங்குள்ள கிரஷர் மற்றும் குவாரிகள் மூலமாக நிறைவேற வேண்டும். இங்கு ஆரம்பிக்கிற அனைத்து குவாரிகளும் உள்ளூர் மக்களுக்குதான் அந்த வேலைவாய்ப்பை வழங்க வேண்டும். அவர்களை தவிர்த்து வேறு யாருக்கம் வழங்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டார். நான் ஆழமாக சொல்ல வரும் ஒரே கருத்து என்னவென்றால், இங்கு சுற்றியிருக்கும் கிராம பொதுமக்கள் அனைவருக்கும் 6 மாதத்திற்கு ஒரு முறை இதே மண்டபத்தில் மருத்துவ முகாம் வசதியை அனைத்து குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் இணைந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் மிகப்பெரிய போராட்டத்தை நடத்துவேன் என்று தெரிவித்துக்கொண்டார்.

4. <u>திரு. சதீஷ், சமூக ஆர்வலர்.</u>

இவர் கூறுகையில்,

உங்கள் ஆச்சார விவகாரங்களை, கலாச்சார, சம்பிரதாயங்களை காப்பாற்றிக் கொண்டு உங்கள் மனோபாவங்களை மதிக்கிறேன். உங்கள் அபிப்பிராயங்கள் நியாமான பிரச்சனைகளை ஒப்புக்கொண்டு உங்களுடன் ஒரு மனதாக ஒப்புக்கொள்கிறேன். உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைக்கும்படி அரசாங்கம் இந்த ஊரினை தத்தெடுத்துக்கொண்டு, நிலையான வளர்ச்சியை உருவாக்குவதற்கு அதிகமான நிதியை உடனே வெளியிட வேண்டும் என்று

கேட்டுக்கொண்டார். உத்தியோகம், வேலைவாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் அங்கு உள்ளவர்களுக்கும் நிரந்தர வீடுகள்கொடுக்க வேண்டுமென்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளிடம் மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார். இந்த ஊரில் மரங்களை வைத்து பசுமையாக பாதுகாக்க வேண்டுமென்று குவாரி உரிமையாளரிடம் கேட்டுக்கொண்டார். குவாரியை செயல்படுத்த உரிமையாளருக்கு எந்தவித கட்டுப்பாட்டை அளிக்காமல் உடனடியாக இயக்குவதற்கான உரிமையை வழங்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்.

**5. <u>திரு. கனகராஜ், தொள்ளாமூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில்,

எங்களது கிராமத்தில் உள்ளவர்களுக்கு நிறைய சிரமங்கள் உள்ளது. இன்று எல்லோரும் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். எங்கள் சிரமங்களை நிறைவேற்ற வேண்டும். இதனால் எங்கள் ஊர் ஏரிக்கு தண்ணீர் வரத்து குறைவாக உள்ளதால், வறட்சியாகி விட்டது. இன்று அவர்கள் சுற்றி இருக்கிற வளங்களை எல்லாம் தோண்டி எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அதனால் நாங்கள் தான் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் மகளிர் யாரும் இல்லை. எல்லாரும் ஆண்கள் மட்டுமே உள்ளார்கள். தொள்ளமூரில் குவாரி அமைய கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுமென ஊரில் தண்டோரா போடவில்லை. அனைவரும் ஆண்கள் மட்டுமே உள்ளார்கள். ஊரில் தண்டோரா போடுங்கள். மகளிர் சார்பாக 10 பேர் வர வேண்டும். இதனால் அவர்களுக்கு சில விழிப்புணர்வு ஏற்படும். அவர்களுக்கு எதாவது நன்மை ஏற்படுமாறு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இன்று நடைபெறும் கூட்டத்தில் தொள்ளாமூரில் இருந்து எந்த மகளிரும் வரவில்லை என்று தெரிவித்தார்.

6. <u>திரு.ஞானசேகர், தொள்ளாமூர் கிராமம்</u>

இவர் கூறுகையில்,

குவாரி வருவது எங்களுக்கு பிரச்சனை கிடையாது. குவாரியின் நிபந்தனைப்படி தொள்ளாமுருக்கு உட்பட்டு இத்தனை பேருக்கு வேலை தருகிறோம் என்று சொல்கிறீர்கள். எங்கள் ஊரில் 10 குவாரி இயங்குகிறது. அந்த குவாரிகளில், இதுவரை எங்கள் ஊரிலிருந்து எவருக்கும் ஒரு ஜாக்கி பிடிக்கும் வேலை கூட கிடைக்கவில்லை. பிறகு ஏன் இது ஒரு நிபந்தனை என்று போடுகிறீர்கள் என்று கேட்டார். இத்தனை குவாரி இருந்தும் எங்கள் ஊரிலிருந்து ஒரு வேலை செய்யும் நபர் கூட இல்லை. எங்கள் ஊரில் 5 ம் வகுப்பு வரை தான் பள்ளிக்கூடம் உள்ளது. அருகில் உள்ள கரசானூர் பள்ளிக்கு தான் எங்கள் ஊர் மாணவர்கள் செல்ல வேண்டும். வரும் வழியில் முழுவதும் தூசியாக உள்ளது. இன்று வந்துள்ள அதிகாரிகளை நேரில் சென்று பார்வையிட சொல்லுங்கள். எங்கள் ஊரில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரம் மாணவர்கள் நடந்து செல்ல வேண்டும். அதனால் சில பிரச்சனைகள் ஏற்படுகிறது. மேலும், எங்கு சென்றாலும் எங்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அவ்வாறு இருக்கும்போது எங்களுக்கு குவாரி எதற்கு? எங்களுக்கு முன்னுரிமை அளிப்பதாக சொல்லிவிட்டு, அதனை செயல்படுத்துவது இல்லை. எங்கள் ஊரில் இருந்து வெளியூர் செல்லும் போது, முக்கிய சாலைகளில் செல்ல முடியவில்லை. பள்ளி சென்று மீண்டும் வருவதற்கு சிரமமாக உள்ளதாக தெரிவித்தார்.

7. <u>திரு.தர்மேந்திரன், எறையூர் கிராமம்</u>

கல் குவாரிகாரர்கள் எந்தவொரு விதிமுறையையும் பின்பற்றுவதில்லை. போக்குவரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள சாலையை பயன்படுத்தாமல், ஏரி கரைகளிலும், மக்களுக்கு தேவையான இடங்களிலும் பாதையை அமைத்து செல்கிறார்கள். வெடி வைக்கும் போது சரியான பாதுகாப்பு இன்றி வெடிக்கிறார்கள். கம்பரஷரை இயக்குபவர்களுக்கு தலைகவசம் உட்பட பாதுகாப்பு

உபகரணங்கள் அளிக்கப்பட வேண்டும். இவை சரியாக இல்லாமல் இருப்பதால் மாதத்தில் 3 அல்லது 4 உயிர் இறப்பு ஏற்படுகிறது. இதனை குவாரி உரிமையாளர்கள் மறைத்துவிடுகிறார்கள். மக்களுக்கும், காவல் நிலையங்களுக்கும் தகவல் அளிப்பதில்லை. அதே போல, பட்டா நிலத்தை லீஸ் எடுத்து உடைக்கிறார்கள். கூடுதலாக, அதன் அருகில் உள்ள நிலத்தையும் வாங்கி அங்கும் உடைத்து எடுக்கிறார்கள். இதுவரை பத்து புகார்கள் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கி உள்ளேன். இதுவரை எந்த புகாருக்கும் பதில் வரவில்லை. இவர்கள் தபாலை A.D. Mines யிடம் தராமல் மறைத்துவிடுகிறார்கள். கிரஷர் பாதுகாப்புடன், மாசு வெளியேறாமல் மேலே பாதுகாப்பு உபகரணம் அமைக்க வேண்டும். ஆனால் இதுபோல் எந்த கிரஷர் உரிமையாளரும் செய்வதில்லை. இதனால், எங்கள் ஊரில் நிறைய பேருக்கு கிட்னியில் கல் உள்ளதாக தெரிவித்தார். கண் சம்பந்தமான பிரச்சனையும் ஏற்படுவதாக தெரிவித்தார். ஊரில் 2 அல்லது 3 பேர் சம்பாதிப்பதற்கு ஊர் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதாக தெரிவித்தார். இதனால் பாதுகாப்புடன் இயக்க வற்புறத்துமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். மேலும் மாணவர்கள் பள்ளிக்கு செல்லும் போது கண்ணில் தூசு படுவதாகவும், இதன் மூலமாக வரும் பிரச்சனைகளை சரி செய்ய மருத்துவத்திற்காக பெறறோர் செலவு செய்கின்றனர் என்று தெரிவித்தார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்</u>

இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் மற்றும் துணை ஆட்சியர் அவர்களுக்கும், பொதுமக்கள், பத்திரிக்கை நண்பர்கள், சமூக ஆர்வலர், காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் நிறைவு பெற்றது.

**<u>இணைப்பு:</u>**

1. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்தபக்கம் 8 மற்றும் நபர்கள் 101)
3. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்

(ப). செல்வகுமார் 6/11/2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

வருவாய் கோட்டாட்சியர்,
விழுப்புரம்.